**சி.சி .எண். 375/2018 நாள்– 18.04.2026 பக்கம் 660/2024**

**ம.சா .2.பழனியம்மாள் க/பெ.மணி**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**M.P 22/2025 கடந்த 15.10.2025 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி,**

எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுளள ம.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையானது, ஜெகநாதன் எனது கணவர் உட்பட இதர நபர்கள் மீது, கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையானது பாஸ்கர் என்பவர் ஜெகநாதன் வகையறா மீது, கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதன்மை சாட்சியத்தில் நான் சொல்லியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் 1ம் எதிரி அவருடைய தோட்டத்தில் தான் இருந்தார் என்றாலும், எனது கணவரும், அவருடன் வந்த 10க்கும் மேற்பட்ட நபர்களும் தான் 1ம் எதிரியிடம் பிரச்சனை செய்தார்கள் என்றாலும், சரியல்ல. சொத்துக்கு சம்பந்தமில்லாத நபர்கள் எனது கணவருடன் வந்ததால் தான் ஊர் மக்கள் ஒன்று கூடிவிட்டார்கள் என்றால், அதற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

எனது கணவர் சொத்துக்கு சம்மந்தமில்லாத நபர்களை அழைத்துவந்து பிரச்சனை செய்து குற்றச்செயலில் ஈடுபட்டு விட்டு, அதில் இருந்து தப்பிப்பதற்காக பொய் புகாரினை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளவாறு எதிரிகள் எனது கணவரை தாக்கவில்லை என்றாலும், அதற்காக கோவை மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சையில் அனுமதிக்கப்படவில்லை என்றாலும், அதன் காரணமாக எனது கணவர் இறக்கவில்லை என்றாலும் சரியல்ல.

நான் இந்த எதிரிகளை துன்புறுத்த வேண்டும் என்பதற்காக எனது கணவர் கொடுத்த பொய் புகாரின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே, பல உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் அதிலிருந்து, துர்லாபம் அடையவேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு எதிரிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், எதிரிகள் இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**